53

# நீங்கள் விசேஷித்தவர்களாக இருக்கிறீர்கள்!

## (12:3-8)

உங்களுக்கு முன்பாக மேஜையின்மீது ஒரு துண்டுத்தாள் இருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அந்தத் தாளின் தலைப்பகுதியில் பின்வரும் அறிவுறுத்தல்கள் உள்ளன: "ஒரு நபரை விசேஷித்தராக்கும் விஷயங்களுக்கு அருகில் குறியிடவும்." அந்த அறிவுறுத்துதல்களுக்குக் கீழே பின்வருபவை போன்ற பண்புகளை உள்ளடக்கிய பட்டியல்[1] ஒன்றுள்ளது:

*அழகாயிருத்தல்.*
*அதிக பணம் மற்றும் அதிக உடமைகள் கொண்டிருத்தல்*
*பிரபலமாயிருத்தல்; ஒவ்வொருவராலும் விரும்பப்படுதல்.*
*மற்றவர்கள்மீது அதிகாரமும் அதிகாரத்துவமும் கொண்டிருத்தல்.*
*பொழுதுபோக்குதல் அல்லது அரசியலில் நன்கு அறியப்பட்டவராக இருத்தல்.*
*உங்கள் புகைப்படம் செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகளில் அச்சிடப் படுதல்.*

*அந்தப் பட்டியலின் கீழே கடைசியில் பின்வரும் விஷயமும் உள்ளது:*

*தேவனுடைய பிள்ளையாயிருத்தல்.*

எந்த விஷயத்தை நீங்கள் குறிப்பிடுவீர்கள்? பின்பு, யாரேனும் ஒருவரை "விசேஷித்தவர்" ஆக்கும் விஷயமாக உலகசிந்தையுள்ள நபர் கருதுவது எது என்பதைப் பற்றிச் சிந்தியுங்கள். முந்திய பாடத்தில், நாம் கவனமாயிராவிட்டால், உலக மதிப்பீட்டு முறைமையைப் பற்றி உணர்ந்தறியாமலே நாம் அதை ஏற்றுக் கொள்ளக்கூடும் என்று குறிப்பிட்டோம். நாம் "புதிதான" சிந்தையுள்ளவர் களாக (ரோமர் 12:2), அது ஒவ்வொரு விஷயத்தையும் கண்ணோக்கும் ஒரு புதிய வழியாக இருக்க வேண்டும் என்று பவுல் நமக்கு அறைகூவல் விடுத்தார்.

இவ்வசனப்பகுதியில் பவுல், நீங்கள் தேவனுடைய பிள்ளையாயிருந்தால், *நீங்கள் விசேஷித்தவர்களாக இருக்கிறீர்கள்* என்று கூறினார். நீங்கள் விசேஷித்தவர் களாக இருக்கிறீர்கள் என்பதற்குப் பவுல் பல ஆதாரங்களைப் பயன்படுத்தி யிருக்க முடியும். அவர் தேவன் உங்களைப் படைத்தார் மற்றும் நீங்கள் தனிச்சிறந்தவர்களாக இருக்கிறீர்கள் என்ற உண்மையைப் பற்றிப் பேசியிருக்க முடியும். "படைப்பு என்பது பிரதியாக்கங்களைக் கொண்டிருப்பதில்லை."[2]

அவர் கிறிஸ்து உங்களுக்காகச் சிலுவையில் மரிக்கும் அளவுக்கு நீங்கள் விசேஷித்தவர்களாக இருக்கிறீர்கள் என்று வலியுறுத்தியிருக்க முடியும். பவுலுடன் சேர்ந்து நீங்கள், "... *என்னில்* அன்புகூர்ந்து *எனக்காகத்* தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரன் ..." என்று கூறக்கூடும் (கலாத்தியர் 2:20; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இருப்பினும், கர்த்தருடைய சபையாகச் செயல்படுவதற்கு அத்தியாவசியமாகவுள்ள குறைந்தபட்சம் ஒரு வரத்தைத் தேவன் உங்களுக்குக் கொடுத்திருப்பதால் நீங்கள் விசேஷித்தவர்களாக இருக்கிறீர்கள் என்பதே பவுலின் வார்த்தைகளிலிருந்து நாம் எடுக்கும் ஆதாரமாக உள்ளது.

## தேவன் உங்களுக்கு விசேஷித்த ஒரு கொடையைத் தந்திருக்கிறார் ... (12:3-6ஆ)

**அறிவுறுத்துதல் (வசனம் 3)**

பவுல், "அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது; உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத்தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்" என்று தொடங்கினார் (வசனம் 3). "எனக்கு அருளப்பட்ட கிருபை" என்ற சொற்றொடர், தேவனுடைய கிருபையினால் பவுலின் மீது அருளப்பட்டிருந்த அப்போஸ்தலத்துவத்தைக் குறிக்கிறது (காண்க ரோமர் 1:5; 15:15, 16; கலாத்தியர் 2:7-9). பவுல் தமது தனிப்பட்ட தகுதியின் காரணமாக அல்ல, ஆனால் தேவனுடைய கிருபையினாலேயே தாம் அப்போஸ்தலராக இருந்தார் என்பதைப் புரிந்துகொண்டு இருந்தார்.

(1) *மிகவும் உயர்வாக அல்ல.* கிருபையினாலே அப்போஸ்தரானவர் என்ற வகையில், பவுல் ஒவ்வொரு வாசகரும், "தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல் ... தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார் (ரோமர் 12:3ஆ). ஆங்கிலத்தில் தெளிவாக இராத வார்த்தைகளின் விளையாட்டு ஒன்றைப் பவுல் பயன்படுத்தினார். மேற்குறிப்பிட்ட இவ்வசனப்பகுதியில் "எண்ணுதல்" (*phroneo*) என்ற வார்த்தைக்கான வடிவங்கள் நான்கு முறைகள் காணப்படுகின்றன. *Phroneo* என்ற வார்த்தை இருமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் கூடுதலாகப் பவுல், "ஒருவர் தம்மைப்பற்றி மிக உயர்வாக எண்ணிக்கொள்ளுதல்" என்று அர்த்தப்படுகிற *huperphroneo* (இதில் *phroneo* என்பதற்கு முன்னர் *huper* ["மேலே" அல்லது "மீது"] என்பது வருகிறது) என்பதைப் பயன்படுத்தினார். கடைசியாக அவர், "நல்ல தீர்ப்பைக் கொண்டிருக்கும்படி," "நல்ல [ஆரோக்கியமான] மனதை" கொண்டிருத்தல் என்று அர்த்தப்படும் *sophroneo* என்ற (*phroneo* என்பதற்கு முன்னால் *sozo* ["இரட்சிக்க"] என்பது வரும்) சொல்லைப் பயன்படுத்தினார்.[3] வசனத்தின் இந்தப் பகுதி, "[உங்களைப்பற்றி] உயர்ந்த சிந்தனைகளைச் சிந்திக்க வேண்டாம். ஆனால் [உங்களைப்பற்றி] ஆரோக்கியமான சிந்தனைகளைச் சிந்தியுங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம். CJB வேதாகமத்தில், "I am telling ... you ... not to have exaggerated ideas about your

own importance. Instead, develop a sober estimate of yourself. ...” என்றுள்ளது.

தேவன் நம்மை வெற்றியைக் கொண்டு ஆசீர்வதித்தால், நாம் மேட்டிமை யால் நிரப்பப்படும் அபாயத்தை எதிர்கொள்கிறோம். நாம் நமது வரங்களைப் பயன்படுத்துவதில் மற்றவர்களைக் காட்டிலும் “அதிகமான ஊக்கத்துடன்” இருத்தல் பற்றி மனமேட்டிமையால் நிரப்பப்பட்டிருக்கவும் கூடும். நம்மைப் பற்றி இவ்விதமாக உயர்வாய்ச் சிந்தியாதிருக்கும்படி நமக்கு உதவக்கூடிய தெய்வீகப் பாதுகாப்பு சாதனம் எது? “அவனவனுக்குத் *தேவன்* பகிர்ந்தவிசுவாச அளவின்படி” (வசனம் 3இ; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்பதை நாம் புரிந்துகொள்ளுதல் அவசியமாக உள்ளது. நாம் அல்ல; கர்த்தர்தாமே மகிமைக்குப் பாத்திரராக இருக்கிறார்.

“விசுவாச அளவு” என்ற சொற்றொடர் ஓரளவுக்குத் தெளிவற்றதாக இருக்கிறது. “அளவு” என்பது “அளப்பதற்குப் பயன்படும் ஒருகருவி” அல்லது “அளக்கப்பட்ட பகுதி” என்பதைக் குறிக்கக்கூடிய *metron* என்பதிலிருந்து வருகிறது.[4] பவுல், தர அளவை என்ற முதல் விளக்கத்தைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று சிலர் நினைக்கின்றனர். நம்மை நாமே அளப்பதற்கு விசுவாசத்தின் தர அளவை ஒன்றைத் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். அந்த அளவுக்கருவியை நாம் பயன்படுத்தும்போது, நமக்குநாமே நேர்மையானவர்களாக இருந்தால், நாம் எவ்வளவு குறைவுபட்டிருக்கிறோம் என்பதை நாம் காண்போம். பின்பு மேட்டிமையானது என்றென்றைக்குமாக வெற்றிகொள்ளப்பட்டிருக்கும். இருப்பினும், பெரும்பான்மையானவர்கள், இரண்டாவது விளக்கமே - ஒரு பகுதி என்பதே - சந்தர்ப்பப்பொருளுடன் மிகநன்கு பொருந்துகிறது என்று நம்புகின்றனர். ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் தேவன் தமது ஆசீர்வாதத்தின் குறிப்பிட்ட ஒரு பகுதியை ஒதுக்கியிருக்கிறார். இது 6ம் வசனத்துடன் பொருந்துவ தாக இருக்கும்: “நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே.”

பின்பு “விசுவாசம்” (*pistis*) என்ற வார்த்தை உள்ளது. இவ்வார்த்தை இந்த நிருபத்தில் முதன்மையானதாக இருந்துள்ளது, ஆனால் இது இவ்விடத்தில் மாறு பட்ட வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது நிச்சயமாகும். இவ்வசனப் பகுதியில் “விசுவாசம்” என்பது சுவிசேஷத்திற்கு நமது தனிப்பட்ட பதில்செயல் (ரோமர் 1:16; 10:17) என்பதைக் காட்டிலும் தேவனுடைய கிருபையின் வெளிப்பாடு என்பதையே அதிகமாய்க் குறிக்கிறது. தேவனுடைய வரங்கள் விசுவாசத்தினால் பயன்படுத்தப்பட வேண்டியவைகளாக இருப்பதால், 3ம் வசனத்தின் “விசுவாசம்” என்பது நமது வரங்களை பயன்படுத்த (வசனம் உட்பட) நமக்குத் தேவையான எதுவானாலும் அவற்றை தேவன் அளிப்பதைக் குறிப்பதாக நாம் நினைக்கலாம். அதுபோலவே, ஆவிக்குரிய வரங்கள் பற்றிய பட்டியல் ஒன்றைப் பேதுரு கொடுத்தபோது, அவர் “ஒருவன் உதவி செய்தால் *தேவன் தந்தருளும்* பெலத்தின்படி செய்யக்கடவன்” என்று கூறினார் (1 பேதுரு 4:11ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

“விசுவாச அளவு” என்ற சொற்றொடரின் அர்த்தம்குறித்துச் செயலற்று மூழ்கிப்போய்விட வேண்டாம். அதனைக் கொண்டு பவுல் எதை அர்த்தப்படுத்தி இருப்பினும், *தேவன்* இதை நமக்கு ஒதுக்குகிறார். எனவே நாம் நமது சொந்தச் செயல்பாட்டில் மேட்டிமை கொள்ள இடமில்லை என்பதே பவுலின் கருத்தாக இருந்தது. ஒருவேளை பவுல் செய்ததைக் காட்டிலும் அதிகமாக வேறு எவரும்

இராஜ்யத்திற்கு [சபைக்கு] செயல்நிறைவேற்றியதில்லை; ஆனால் அவர், "ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்" என்று கூறினார் (1 கொரிந்தியர் 15:10அ).

(2) *மிகவும் தாழ்வாக அல்ல.* கிறிஸ்தவர்கள் தங்களைப்பற்றி மிகவும் உயர்வாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது 3ம் வசனத்தில் பவுலின் குறிப்பிட்ட அக்கறையாக இருந்தது. இருப்பினும், "தன்னைக்குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல்'' என்ற புத்திமதியானது எதிர்மிகை முனையையும் கண்டனம் பண்ணுகிறது: [இது] தம்மைக்குறித்து *மிகவும் தாழ்ந்த* மதிப்பீடு கொண்டுள்ள ஒரு கிறிஸ்தவர் [என்பதாக] உள்ளது. எந்த ஒரு உறுப்பினரும், தாம் மற்றவர்களைவிட மேன்மையானவர் என்று கருதக்கூடாது, ஆனால் எந்தக் கிறிஸ்தவரும் தம்மை மதிப்பற்றவர் என்றும் கண்ணோக்கக்கூடாது. பவுல், "*ஒவ்வொருவருக்கும்* தேவன் ஒரு விசுவாசத்தின் அளவைப் பகிர்ந்தளித்திருக்கிறார்'' என்று கூறினார். கர்த்தர் எவரொருவரையும் வெளியே விட்டுவைத்து விடுவதில்லை; அவர் தமது பிள்ளைகள் *யாவருக்கும்* வரங்களைக் கொடுத்துள்ளார். நாம் காணப்படாத மேட்டிமை குறித்து ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும், ஆனால் அதே வேளையில் நாம் தேவன் நம்மீது பொழிந்து இருக்கும் வரங்களைப் பயன்படுத்துவதிலிருந்து நம்மைத் தடைசெய்யும் தவறான தாழ்மையைத் தவிர்ப்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

**விவரிப்பு (வசனங்கள் 4-6ஆ)**

பவுல் அடிக்கடி பயன்படுத்திய ஒரு விவரிப்பைக் கொண்டு தமது அறிவுரையைத் தொடர்ந்தார். 4 மற்றும் 5ம் வசனங்களில், அவர் சபையை ஒரு மனித உடலுக்கு ஒப்பிட்டுப் பேசினார்:

> ஏனெனில், நமக்கு ஒரே [பௌதீக] சரீரத்திலே [கைகள், பாதங்கள் முதலிய] அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில்[5] இராததுபோல, அநேகராகிய [கிறிஸ்தவர்களாகிய] நாமும் கிறிஸ்துவுக்குள் [அதாவது, சபைக்குள்: எபேசியர் 1:22, 23] ஒரே [ஆவிக்குரிய] சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களா [செயல்படும் பாகங்களா]யிருக்கிறோம் (காண்க 1 கொரிந்தியர்12:27; கொலோசெயர் 1:18, 24).

இந்த ஒப்பீட்டிலிருந்து பல நடைமுறைப் பயன்பாடுகள் ஏற்படுத்தப்பட முடியும் (காண்க 1 கொரிந்தியர் 12:12-27[6]). எடுத்துக்காட்டாக, பவுல் சபை/சரீரம் என்பதன் சந்தர்ப்பப்பொருளில், நாம் நமது வரங்களைச் செயல்படுத்துவதைத் தெளிவாக்கினார். இதைச் செய்வதற்கு, நாம் உள்ளூர் சபைக்குழுமத்தில் செயல்துடிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். நமது வேதபாடவசனப் பகுதியில் கருத்தாகத் தெரிவிக்கப்பட்ட அல்லது மறைமுகமாய் உணர்த்தப்பட்ட, மற்ற பல நடைமுறைப் பயன்பாடுகளைப் பட்டியலிட என்னை அனுமதியுங்கள். இவற்றை நான் குறிப்பிடுகையில், உங்கள் மனதில் மனித உடலைச் சித்தரித்துக்கொள்ளுங்கள்.[7]

(1) *சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒன்று அல்லது அதற்கு அதிகமான வரங்களை (செயல்பொறுப்புகளை) கொண்டுள்ளனர்; எவரொருவரும்*

விடப்படுவதில்லை. 6ம் வசனம், "நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே" என்று கூறுகிறது. இந்த வரங்கள் என்பவை என்ன? பெரும்பான்மையானவர்கள், தேவன் நமக்குக் கொடுத்துள்ள தாலந்துகள் மற்றும் திறன்கள் ஆகியவை பற்றி நினைக்கின்றனர், மற்றும் பவுல் இதையே தமது சிந்தையில் முதன்மையாகக் கொண்டிருக்கலாம். ஒருவேளை நாம் தேவன் நமக்கு அருளிய வரங்களை, அவர் தமக்குக் கொடுத்துள்ள தாலந்துகள் மற்றும் திறமைகள் அத்துடன் கூடுதலாக அந்த வரங்களைப் பயன்படுத்த நமக்கு அவசியமான மற்றவேறெதுவும் என்பதாக நினைக்க வேண்டும்.

*(2) எல்லா வரங்களும்/செயல்பொறுப்புகளும் ஒரேமாதிரியானவை அல்ல.* 6ம் வசனத்தைத் திரும்பவும் கண்ணோக்குங்கள்: "நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் *வெவ்வேறான* வரங்களுள்ளவர்களானபடியினாலே" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). கண்ணின் செயல்பொறுப்பு காதின் செயல் பொறுப்பிலிருந்து மாறுபடுகிறது, கையின் செயல்பொறுப்பு பாதத்தின் செயல் பொறுப்பைப் போன்றிருப்பதில்லை.

பல எழுத்தாளர்கள் நமது வேதபாடவசனத்தின் இந்தப் பகுதியை, சபையின் நம்பிக்கைகளினுடைய ''பல்வகைத்தன்மையை'' அங்கீகரித்தல் பற்றியும் ''மற்றவர்களின் கண்ணோட்டங்களை'' சகித்துக்கொள்ளுதல் பற்றியும் பேசுவதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றனர். பவுல், விசுவாசங் களின் பல்வகைத்தன்மைபற்றியல்ல, ஆனால் பணிப்பொறுப்புக்களின் பல்வகைத் தன்மைபற்றியே பேசினார். 14 மற்றும் 15ம் அதிகாரங்களில், அவர் கருத்துக்கள் பற்றிய விஷயங்களில் நாம் ஒருவருக்கொருவர் சகிப்புத் தன்மையுடன் இருப்பது அவசியம் என்று வலியுறுத்தினார், ஆனால் விசுவா சத்தின் விஷயங்கள் பற்றிய விஷயம் என்ன? ஒருவர் தவறைச் சகித்துக் கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் நம்பினாரா? 16:17ல் அவர், "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோத மாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" என்று கூறினார்.

நாம் நமது கலந்துரையாடலுக்குத் திரும்புவோமாக: சபையின் எல்லா உறுப்பினர்களும் ஒரே விதமான வரத்தை/செயல்பொறுப்பை கொண்டிருப்ப தில்லை. கண்ணானது நுகருவதையோ அல்லது காதானது காண்பதையோ நாம் எதிர்பார்ப்பதில்லை; நம்மில் பெரும்பான்மையானவர்கள் பொருட்களை நமது பாதங்களினால் எடுக்கவோ அல்லது நமது கைகளினால் நடக்கவோ முடியாது. இருப்பினும், சிலவேளைகளில் நாம் சபையின் எல்லா உறுப்பினர்களும் ஒரேமாதிரி செயல்பட வேண்டும் என்றும், "காதாக" உள்ள உறுப்பினர் ஒருவர் "காண்பதில்" சரியாகச் செயல்படாததற்கு அவர் சிட்சிக்கப்படலாம் என்றும் எதிர் பார்க்கிறோம். செயல்பொறுப்புக்களில் பல்வகைத்தன்மை உள்ளது என்பதை நான் உணர்ந்தறிய வேண்டும்.

*(3) ஒவ்வொரு வரமும்/செயல்பொறுப்பும் முக்கியமானதாக உள்ளது.* பௌதீகரீதியான உடலின் சில உறுப்புகள் மற்றவற்றைவிட அதிகமான கவனத்தைப் பெறுகின்றன, ஆனால் எல்லா உறுப்புகளுமே உடலின் நல்லிருப்பு மற்றும் செயல்படுதல் ஆகியவற்றிற்கு இன்றிமையாதவையாக உள்ளன. தமது

பௌதீக உடலின் உறுப்புகளில் ஒன்று துண்டிக்கப்பட்ட யாரேனும் ஒருவரைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? தமது உடலின் ஒரு பகுதியினுடைய பயன் பாட்டை இழந்து நோய்ப்படுக்கையிலுள்ள யாரேனும் ஒருவரை நீங்கள் பார்த் திருக்கிறீர்களா? அப்போது நான் எதை அர்த்தப்படுத்துகிறேன் என்பதை நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள்.

எனது குடும்பத்தார் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து ஊழியம் செய்து கொண்டிருந்தபோது, எனது சகோதரர் காய் என்பவர் அமெரிக்காவில் ஒரு பள்ளியாண்டைச் செலவிட்டார். அந்த ஆண்டில் நான் பிரசங்கித்தலுக்கான மெக்கியூரி பள்ளியை இயக்கி, பிரசங்கித்தல் பற்றி காயின் வகுப்பில் பாடம் நடத்தினேன். காட்சி உதவிப்பொருள்களைப் பயன்படுத்திய பிரசங்கம் ஒன்றைப் பிரசங்கித்தல் என்பது நான் மாணவர்களுக்குக் கொடுத்த பயிற்சிகளில் ஒன்றாக இருந்தது. பெரும்பான்மையான மாணவர்கள், வரைபடங்களையும் மற்ற போதனை உதவிப்பொருட்களையும் தயாரித்திருந்தனர்; ஆனால் டான் மேல்ஸ் என்ற ஒரு மாணவர், போதனைக்கான உதவிப்பொருள் எதுவுமின்றியே வகுப்பிற்கு வந்தார். அவர் பேசவேண்டிய தருணம் வந்தபோது, அவர் ரோமர் 12 மற்றும் 1 கொரிந்தியர் 12 ஆகிய அதிகாரங்களிலிருந்து வசனப்பகுதிகளை தமது வேதபாட வசனப் பகுதியாகப் பயன்படுத்தி, பௌதீக உடலின் உறுப்புக்கள் பற்றிப் பேசினார். அவர், “ஒவ்வொரு உறுப்பும் முக்கியமானதாகவே உள்ளது” என்று கூறினார். பின்பு அவர் தமது கையை உயர்த்தி, “எடுத்துக்காட்டாக, எனது கையிலுள்ள விரல் ஒவ்வொன்றும் முக்கியமானதாக உள்ளது. கட்டை விரலும் நடுவிரலும் முக்கியமானவையாக உள்ளன; அவைகள் பொருட்களை எடுப்பதற்கு நமக்கு உதவுகின்றன. முதல் விரலை நாம், பொருட்களைச் சுட்டிக்காட்டப் பயன்படுத்துகிறோம். மூன்றாவது விரலில் நாம் மோதிரங்களை அணிகிறோம்” என்று கூறினார். அடுத்ததாக அவர் தமது சிறுவிரலை உயர்த்திப்பிடித்தார். “ஆனால் இந்த சிறுவிரலைப் பற்றிய விஷயம் என்னவாக உள்ளது? இது எந்த நன்மைக்கு உதவுகிறது?” சற்றே அமைதியாயிருந்த அவர் பின்பு, “உங்களுக்கு எப்போதாவது காது அரிப்பு ஏற்பட்டதுண்டா?” என்று கேட்டார். அவர் அந்தச் சிறுவிரலைத் தமது காதிற்குள் விட்டு, சுழற்றி காதிற்குள் குடைந்தார். பின்பு அவர் நிம்மதிப் பெருமூச்சின் சைகை ஒன்றைச் செய்து, “ஆம், ஒவ்வொரு உறுப்பும் முக்கியமானதாகவே உள்ளது!” என்று கூறினார்.

“ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்” என்று கூறி 5ம் வசனத்தைப் பவுல் முடித்தார். AB வேதாகமத்தில், “parts one of another - [mutually dependent on one another]” என்றுள்ளது. எனது பௌதீகரீதியான உடலிலுள்ள ஒரு உறுப்புக்கு, எனது உடலின் மற்ற எல்லா உறுப்புக்களும் தேவைப்படுவது போன்றே, ஆவிக்குரிய உடலின் (சபையின்) ஒரு உறுப்பினருக்கு அவ்வுடலின் மற்ற எல்லா உறுப்பினர்களும் தேவையாக இருக்கின்றனர். முக்கியமற்ற உறுப்பினர்கள் என்று யாருமில்லை, முக்கியமற்ற வரங்கள் என்று எதுவும் இல்லை.

*(4) கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வரமும் பயன்படுத்தப்பட வேண்டிய தாக உள்ளது.* 6ம் வசனத்தைத் திரும்பவும் ஒருமுறை வாசியுங்கள்: “நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர் களானபடியினாலே.” இதைப்பற்றி நாம் பிற்பாடு அதிகமாய்ப் பேசுவோம்.

## ... எனவே கண்டறியுங்கள் ... (12:6இ-8)

இந்த வேளையில் நீங்கள், "தேவன் எனக்கு ஒரு வரத்தைக் கொடுத்திருந்தார் என்றால், அது என்ன வரம்? எனது வரம் என்ன என்பதை நான் எவ்வாறு கண்டறியக்கூடும்?" என்று நினைத்துக் கொண்டிருக்கலாம்.

**ஒரு பட்டியல்**

*6* முதல் *8* வரையிலான வசனங்களில், பவுல் ஏழு வரங்களின் பட்டியல் ஒன்றைக் கொடுத்தார்: தீர்க்கதரிசனம் கூறுதல், ஊழியம் செய்தல், போதித்தல், புத்தி சொல்லுதல், கொடுத்தல், வழிநடத்துதல் மற்றும் இரக்கம் காட்டுதல். வேதாகமத்தின் பெரும்பான்மையான பட்டியல்கள் போலவே, இதுவும் முற்றான ஒன்றாக இருப்பதில்லை. "அசாதாரணமான" (அற்புதமான) மற்றும் "சாதாரணமான" (அற்புதமற்ற) வரங்களின் மற்ற பட்டியல்கள், *1* கொரிந்தியர் *12:8-10, 28*; எபேசியர் *4:11*; மற்றும் *1* பேதுரு *4:11* ஆகிய வசனப்பகுதிகளில் காணப்படுகின்றன. இருந்தபோதிலும், ரோமர் *12*ல் காணப்படும் ("ஊழியம்" போன்ற) சில சொற்றொடர்கள், நம்மில் பெரும்பான்மையானவர்கள், வசனம் *6* முதல் *8* வரையுள்ள பகுதியில் தேவன் நமக்கு அளித்துள்ள எந்த வரத்தையும் உள்ளடக்கக்கூடிய ஒரு சொற்றொடரையாவது காணக்கூடிய அளவுக்குப் பொதுவாகப் போதுமானவையாக உள்ளன.

*12:6-8*ல் உள்ள ஏழு வரங்களைப் பற்றி நாம் கலந்துரையாடுவதற்கு முன்பு, இந்த வரங்களின் இயல்பு பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். முதலாவது வரம் ("தீர்க்கதரிசனம் உரைத்தல்") "அசாதாரணமானதான" (அற்புத) வரமாக இருந்தது. எஞ்சியுள்ளவை அனேகமாக "சாதாரணம்" (அற்புத மற்றது) என்ற வகைப்பாட்டில் பொருந்தலாம்.[8] வரங்கள் யாவும் தேவனிடத்திலிருந்து வந்தன என்பதால், முதல் நூற்றாண்டு எழுத்தாளர்கள் பொதுவாக, அற்புத வரங்கள் மற்றும் அற்புதமற்ற வரங்கள் ஆகியவற்றிற்கிடையில் தெளிவான வித்தியாசம் எதையும் ஏற்படுத்தவில்லை. R. C. பெல் என்பவர், தேவன் ஒருவேளை அற்புத வரங்களை, அந்தப் பகுதிகளில் ஏற்கனவே இயல்பான மனவிருப்பம் கொண்டிருந்தவர்களுக்குக் கொடுத்திருக்கலாம் என்று கருத்துத் தெரிவித்தார். பின்பு அவர்கள் எழுதி முடிக்கப்பட்ட வசனத்தை பெற்றுக்கொண்ட பிற்பாடு, அவர்கள் அற்புதத்தின் கூறு இன்றியே சபையின் ஊழியத்தைச் செயல்படுத்த முடிந்தது.[9] நாம் அற்புதங்களின் காலத்தில் வாழ்வதில்லை, ஆனால் இன்னமும் நாம் நமது அற்புதமற்ற வரங்கள் மேலிருந்தே வந்துள்ளன என்பதை உணர்ந்தறிய வேண்டியுள்ளது (யாக்கோபு *1:17*). இப்போது நாம் இந்த ஏழு வரங்களையும் சுருக்கமாகக் கண்ணோக்குவோமாக:

*(1) தீர்க்கதரிசனம் உரைக்கும் வரம்.* "தீர்க்கதரிசி" (*prophetes*) என்ற வார்த்தை "இன்னொருவருக்காகப் பேசுபவர்" என்று அர்த்தப்படுகிறது (இது *phemi* ["கூற"] என்பதற்கு முன்னால் *pro* ["முன்பாக"] என்ற சொல் இணைந்ததாகும்).[10] புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், தீர்க்கதரிசிகள் தேவனுக்காகப் பேச ஏவப்பட்டவர்களாக இருந்தனர் (காண்க நடபடிகள் *11:27*; *13:1*; *15:32*; *1* கொரிந்தியர் *12:28*; எபேசியர் *2:20*; *4:11*). அவர்களின் செய்தியானது, "தீர்க்கதரிசனம்" (*propheteia*) என்று அழைக்கப்பட்டது. இன்றைய நாட்களில் நாம் ஏவப்பட்ட தீர்க்கதரிசிகளைக் கொண்டிருப்பது இல்லை, ஆனால் தேவன்

புதிய ஏற்பாட்டில் அவர்களின் செய்தியினுடைய சாராம்சத்தைப் பாதுகாத்து வைத்துள்ளார்.

சில கிறிஸ்தவ ஆண்கள் தேவனுடைய வசனத்தை வெளிப்படையாகப் பிரசங்கிக்கும் அல்லது பேசும் வரத்தைக் கொண்டுள்ளனர் - இது ஒரு கருத்தில் "தேவனுக்காகப் பேசுதல்" என்பதாக உள்ளது - என்பதே தீர்க்க தரிசன வரத்தைப் பொறுத்தமட்டில் இன்றைய நாட்களில் சாத்திய மான ஒரு நடைமுறைப் பயன்பாடாக உள்ளது. (எல்லா ஆண்களும் இந்தத் திறமையைக் கொண்டிருப்பதில்லை. சரீரத்தின் விவரிப்பைப் பயன்படுத்துவ தென்றால், தேவன் ஒவ்வொரு ஆணையும் வாயாகப் படைக்கவில்லை.)

*(2) ஊழியம் செய்யும் வரம்.* பவுலின் அடுத்த வார்த்தை *diakonia* என்பதி லிருந்து வந்தது, இது "ஊழியம்" என்று அர்த்தப்படுகிறது. *Diakonos* ("ஊழியர்") மற்றும் *diakoneo* ("ஊழியம் செய்ய") என்பவை இத்துடன் தொடர்புடைய வார்த்தைகளில் உள்ளடங்குகின்றன. இவ்வார்த்தைகள் சிலவேளைகளில், உதவிக்காரர்களின் ஊழியம் (1 தீமோத்தேயு 3:10, 13) அல்லது பிரசங்கியார்களின் ஊழியம் (1 தீமோத்தேயு 4:6; 2 தீமோத்தேயு 4:5) போன்ற, சபையின் விசேஷித்த ஊழியங்களைக் குறிக்கின்றன. இருப்பினும், பெரும்பான்மையான வேளைகளில், இவைகள் இன்னொருவருக்குச் செய்யும் *எந்த* ஊழியத்தையும் குறிக்கின்றன (நடபடிகள் 19:22; ரோமர் 15:25; 2 தீமோத்தேயு 1:18; பிலேமோன் 13; எபிரெயர் 6:10). 1 கொரிந்தியர் 12:5ன் சொற்றொடராக்கத்தைக் கடனாகப் பெறுவதென்றால், "ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு." சிலர், செய்யப்பட வேண்டியது (*எதுவாக* இருந்தாலும் அது) என்ன என்பதைக் காண் பதற்கும் அதைச் செய்து முடிப்பதற்கும் தனித்திறன் கொண்டவர்களாக இருக் கின்றனர்.

*(3) போதிக்கும் வரம்.* "போதித்தல்" என்பது "அறிவுறுத்தல் தர" என்று அர்த்தப்படுகிற *didasko* என்ற வினைச்சொல்லிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.[11] சிலர் தகவல்களைப் பிறருக்கு அளிப்பதில் நிபுணத்துவம் வாய்ந்தவர் களாக உள்ளனர்.

*(4) புத்திசொல்லும் வரம்.* "புத்திசொல்லுதல்" என்பதற்கான (*parakaleo* என்பதிலிருந்த வந்த) வார்த்தையானது வளமான அர்த்தம் உடையதாகும். இது *para* ("உடன்") என்பதை *kaleo* ("அழைக்க") என்பதுடன் இணைத்துப்பெற்ற கூட்டுச்சொல்லாக உள்ளது. உதவிக்கு "இன்னொருவரைப் பக்கமாக அழைத்தல்" என்பதன் உருவகமாக இது உள்ளது.[12] *Parakaleo* என்பது "புத்தி கூறுதல்," "ஊக்கமூட்டுதல்," "ஆற்றுப்படுத்துதல்," அல்லது "பெலப்படுத்துதல்" என்றுகூட மொழிபெயர்க்கப்பட முடியும். சில தனிநபர்கள், மற்றவர்களை ஊக்கமூட்டவும் தூண்டவும் திறன் கொண்டுள்ளனர்.

*(5) கொடுக்கும் வரம்.* அடுத்ததாகப் பவுல், "கொடுக்கிற" ஒருவரைப் பற்றிப் பேசினார். அவர் பயன்படுத்திய வார்த்தை *metadidomi* என்ற (*didomi* ["கொடுக்க"] என்பதற்கு முன்னர் *meta* ["உடன்"] என்பதைக் கொண்டுள்ள) வார்த்தையிலிருந்து வந்துள்ளது. இது "பகிர்ந்துகொள்ள" என்று அர்த்தப்படுகிறது.[13] NIV வேதாகமத்தில் "contributing to the needs of others" என்றுள்ளது. கொடுத்தல் என்பதை வரம் என்பதாக நினைத்தல் சற்றே வினோத மானதாகக் காணப்படுகிறது, ஆனால் நாம் தேவன் நமக்குக் கொடுத்துள்ள செயல்திறன் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம் என்பதை நினைவில்

வையுங்கள். உங்களால் கொடுக்கக் கூடுமென்றால் அது, தேவன் உங்களுக்கு முதலில் பணம் அல்லது உடைமைகளைக் கொடுத்துள்ளார் என்று அர்த்தப்பட வேண்டும். பெரும்பான்மையான எழுத்தாளர்கள், கொடுக்கும்வரமானது பணம்சம்பாதிக்கும் திறனை முன் அனுமானிக்கிறது என்று நம்புகின்றனர். சிலர் பணம்சம்பாதிக்கக்கூடிய திறன் கொண்டுள்ளனர், மற்றவர்கள் அந்தத் திறன்கொண்டிருப்பதில்லை. நாம் அதிக முக்கியமான விஷயங்களைப் புறக்கணிக்காதிருக்கும் வரையிலும் மற்றும் நமது பணத்தைச் சுயநலமான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தாத வரையிலும், பணம் ஈட்டுதலில் தவறு எதுவும் இருப்பதில்லை (1 தீமோத்தேயு 6:9, 10, 17-19 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்).

(6) *முதலாளியாயிருத்தல்/நடத்துதல்.* "முன்னதாக நிற்குதல் (*histemi* ["நிற்க"] என்பதற்கு முன்னர் *pro* ["முன்னதாக"] என்பது சேர்ந்த)" என்று அர்த்தப்படும் *proistemi* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்தே "முதலாளியாயிருத்தல்/நடத்துதல்" என்பது வந்துள்ளது. *Proistemi* என்பது "நடத்துதல்," "ஆளுகை செய்தல்," மற்றும் "மேலாண்மை செய்தல்" என்றும்கூட மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சிலர் தங்களைப் பின்பற்றும்படி மக்களை ஏவுதலில் இயல்பான திறன் கொண்டுள்ளனர். நான் வாழும் இடத்தில் பின்வரும் கூற்றை நாங்கள் கொண்டுள்ளோம்: "அவன் தலைவனாவதற்கே பிறந்தவன்." பவுல் அனேக மாக, மூப்பர்களை முதன்மையாகத் தமது சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம் (காண்க 1 தீமோத்தேயு 5:17). நாம் ஒரு மனிதரைத் தலை*வராக்குவதற்காக* அவரை மூப்பராகப் பணியாற்றும்படி தேர்ந்தெடுப்பதில்லை; அவர் அந்த அலுவலில் வைக்கப்படுவதற்கு முன்னரே [நம்மால்] ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்துனராக இருக்க வேண்டும். இருப்பினும் வழிநடத்துதல் பற்றிய பவுலின் அறிவுறுத்தலானது மிகப்பரவலான நடைமுறைப்பயன்பாட்டைக் கொண் டிருக்கலாம். *Proistemi* என்பது தந்தை தமது குடும்பத்தை நடத்துகிற வழியை விவரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது (1 தீமோத்தேயு 3:4, 12).

(7) *இரக்கஞ்செய்யும் வரம்.* "இரக்கஞ்செய்தல்" என்பதற்கான வார்த்தை யானது, "இன்னொருவரிடத்தில் ... பரிதவிப்பாக உணருதல்" மற்றும் அதைப் பின்பு செய்கையில் வெளிப்படுத்துதல் என்று அர்த்தப்படுகிற *eleeo* என்ற வார்த்தையிலிருந்து வந்துள்ளது.[14] இது ஒரு பல்முகப்புள்ள வரமாகும்: மக்களுக்கு உதவி எப்போது தேவைப்படுகிறது என்று அறிதலுக்கான உட்கண்ணோக்கு, எவ்வகையான உதவி மிகவும் பயன்நிறைந்ததாக இருக்கும் என்று மிகச்சரியாக அறியும் வரம் மற்றும் அந்த உதவியை எவ்வித ஆர்ப்பாட்டமுமின்றி அமைதி யாக வழங்கும் வரம். ஒருசில வரங்களே இதைக் காட்டிலும் அதிக நன்மை செய்பவையாக உள்ளன, இருப்பினும் இது அடிக்கடி பொதுமக்களின் அங்கீ கரிப்பைக் குறைவாகவே பெறுகிறது.

பட்டியலை ஒருதடவை கண்ணோக்குங்கள். சில வரங்கள் (தீர்க்கதரிசனம் உரைத்தல், போதித்தல், புத்திசொல்லுதல்) *பேசுதலுடன்* முதன்மையாகத் தொடர்புகொண்டிருப்பதையும் அதே வேளையில், எஞ்சியுள்ளவை (ஊழியம் செய்தல், கொடுத்தல், முதலாளியாயிருத்தல், இரக்கஞ்செய்தல்) *ஊழியம் செய்வதை* உள்ளடக்கி இருப்பதையும் கவனியுங்கள். இந்தப்பட்டியலை ஆராய்ந்து பார்த்ததில் ஒருவேளை நீங்கள் மாறுபட்ட வரங்களைக் கொண்டிருந்த மக்கள் பற்றிய வேதாகமரீதியான உதாரணங்களை - மற்றும் ஒருவேளை இந்த

*வரங்களைக் கொண்டுள்ளவர்கள் என்று நீங்கள் தனிப்பட்டவகையில் அறிந்துள்ள மக்களைப் பற்றி நினைத்திருக்கலாம்.[15] இந்த வரங்களைப் பற்றிப் படிக்கையில் எனது சிந்தைக்கு வந்த சிலர் பற்றிய விவரம் கீழே உள்ளது:*

- *தீர்க்கதரிசனம் உரைக்கும் வரம் - அகபு (நடபடிகள் 11:28; 21:10, 11).*
- *கொடுக்கும் வரம் - இயேசுவையும் அப்போஸ்தலர்களையும் ஆதரித்த பெண்கள் (லூக்கா 8:1-3).*
- *புத்திசொல்லும் வரம் - "ஆறுதலின் மகன்" எனப்படும் பர்னபா (நடபடிகள் 4:36).*
- *ஊழியத்தின் வரம் - கடந்தகாலத்தில் பவுலுக்கு அடிக்கடி உதவி யிருந்த பெபேயாள் (ரோமர் 16:1, 2).*
- *இரக்கங்செய்யும் வரம் - விதவைகளுக்கு உடைகள் தைத்துக் கொடுத்த தொற்காள் (நடபடிகள் 9:36, 39).*

*நான் அறிந்த வரையில், இயேசு ஒருவர் மாத்திரமே இந்த ஏழு வரங்களையும் கொண் டிருந்தார். நம்மில் பெரும்பான்மையானவர்கள், ஒன்று அல்லது ஒருசில வரங்கள் மாத்திரம் கொண்டிருக்கிறோம் (மத்தேயு 25:15உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்).*

**ஒரு அறைகூவல்**

*நாம் வரங்களைப் பட்டியலிடுகையில், "ஒருவேளை இந்த வரத்தைத் தேவன் எனக்குக் கொடுத்திருக்கிறாரோ?" என்று கேட்டீர்களா? ஒருவர் அல்லது ஒருத்தி தமது தாலந்து என்ன என்று தீர்மானிக்கவும் பின்பு அதைப் பயன்படுத்தவும் சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரையும் காட்டிலும் ஒருசில விஷயங்கள் அதிகம் முக்கியமானவைகளாக உள்ளன.* ஒவ்வொரு *உறுப்பினரும் தான் செய்ய முடிந்ததைச் செய்வதில் மும்முரமாயிருக்கும் சபைக்குழுமம் ஒன்று பற்றி உங்களால் கற்பனை செய்ய முடியுமா? அந்த சபைக்குழுமம் நன்மைக்கான என்ன ஒரு சக்தியாக இருக்க முடியும்!*

*இவ்வேளையில் சிலர், "தேவன் எனக்கு எந்த வரத்தைக் கொடுத்துள்ளார் என்று நான் எவ்வாறு* அறியமுடியும்?*" என்று கேட்கின்றனர். பல்வேறு கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. ஜேம்ஸ் பெயர்டு என்பவர் சாத்தியமான ஒரு செயல்முறையை வரைகுறிப்பிட்டார்.[16]*

- *உங்களால் செய்ய* முடிந்த*, நன்கு* செய்யக்கூடிய*, மகிழ்வுடன் அனுபவித்துச் செய்கிற விஷயங்களைப் பட்டியலிடுங்கள்.*
- *சபைக்குழுமத்தில்* செய்யப்பட வேண்டிய *அவசியமான விஷயங்களை எழுதுங்கள்: ஆராதனை ஊழியங்கள், சேவைத் திட்டங்கள், தொடரும் தேவைகள், தேவைகள் கொண்ட சக உறுப்பினர்களுக்கானவை மற்றும் பிற.*
- *இவ்விரு பட்டியல்களையும் ஒப்பிடுங்கள். எவ்விடத்தில் உங்கள் தாலந்துகளும் திறன்களும் பொருந்துகின்றன என்று காண முயற்சி செய்யுங்கள். இருப்பினும் தற்போது நீங்கள் செய்யக்கூடியவற்றுடன் உங்களை மட்டுப் படுத்திக்கொள்ள*

வேண்டாம். "எந்தத் திறன்கள் என்னால் *மேம்படுத்திக்கொள்ள முடியும்?*" என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள்.

- வழிகாட்டுதலுக்காக ஜெபியுங்கள். (இது ஒவ்வொரு படிநிலை யுடனும் செல்கிறது.)
- மற்ற மக்களின் ஆலோசனையை நாடுங்கள்: மூப்பர்கள், உதவிக் காரர்கள், பிரசங்கியார்கள் மற்றும் பக்குவம் அடைந்த பிற கிறிஸ்தவர்கள்.
- சிந்திப்பதற்கு நேரத்தை அனுமதியுங்கள்.
- நிறைவாக, உங்களால் செய்ய முடிவது என்ன என்பதைப் பற்றிய முடிவை மேற்கொள்ளுங்கள். அதற்கு உங்களை அர்ப்பணியுங்கள் மற்றும் அதைச் *செய்யத்* தொடங்குங்கள்.

முன்னெச்சரிக்கையின் ஒரு வார்த்தை இங்கு முறையானதாக உள்ளது. யாரேனும் ஒருவர், "நான் போதிக்கும் வரம்கொண்டிருக்கிறேன், எனவே நான் இரக்கஞ்செய்யத் தேவையில்லை" அல்லது "நான் புத்திசொல்லும் வரம்கொண்டிருக்கிறேன், எனவே நான் கொடுக்கத் தேவையில்லை" என்று முடிவு செய்வதை, என்னால் கற்பனை செய்ய முடிகிறது. இந்த ஏழு வரங்களையும் ஓரளவுக்குச் செயல்படுத்துவதில் நாம் *ஒவ்வொருவரும்* ஈடுபட வேண்டும் என்று வேதாகமம் கட்டளையிடுகிறது:

- சுவிசேஷ ஊழியம் செய்தல், தேவனுக்காகப் "பேசுபவராக" இருத்தல் (மத்தேயு 28:19, 20; மாற்கு 16:15, 16).
- ஊழியம் செய்தல் (கலாத்தியர் 5:13; ரோமர் 12:11).
- போதித்தல் (எபிரெயர் 5:12).
- புத்திசொல்லுதல் (எபிரெயர் 3:13; 10:24, 25).
- கொடுத்தல் (லூக்கா 6:38; ரோமர் 12:13; 1 கொரிந்தியர் 16:1, 2; 2 கொரிந்தியர் 8; 9).
- முன்னின்று நடத்துல் (1 தீமோத்தேயு 3:4, 12). (சபைக்குழுமத்தை நடத்துதல் [மூப்பராக இருத்தல்] ஆண்களுடன் மட்டுப்படுத்தப் படுகிறது.)
- இரக்கஞ்செய்தல் (லூக்கா 10:37; கொலோசெயர் 3:12).

நமது வரங்களைக் கண்டறிதல் என்பது கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைவிட அதிகமானதல்ல; அதன்மீது வேதாகமம் பொதுவான அறிவுறுத்துதல்களைக் கொடுக்கிறது. மாறாக, இது நமது கிறிஸ்தவ ஊழியத்தில் *வலியுறுத்துதலைத்* தீர்மானிக்கும் விஷயமாக உள்ளது. நான் கல்லூரிக்குச் சென்றபோது, பட்டம் பெறுவதற்கு - ஆங்கிலம், வரலாறு மற்றும் அறிவியல் உட்பட - பல பாடங்களைப் படிக்க வேண்டியிருந்தது. இருப்பினும், எனது நேரத்தில் அதிகமான பகுதி வேதாகமத்தையும் வேதாகமம் தொடர்பான பாடங்களையும் படிப்பதில் செலவிடப்பட்டது. "வேதாகமம்" என்பது "பிரதான பாடம்" என்பது கல்லூரியில் பயன்படுத்தப்பட்ட சொற்றொடராக இருந்தது. இதை நமது விஷயத்திற்கு நடைமுறைப்படுத்துவதென்றால், நமது வரம் அல்லது வரங்கள் நமது ஆவிக்குரிய "பிரதானபாடத்தை" தீர்மானிக்க வேண்டும்.

தேவன் நமக்கு வரங்களைக் கொடுத்துள்ளார், மற்றும் அவற்றை நாம் பயன்படுத்த வேண்டும் என்று அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். உங்கள் வரங்களைக் கண்டறிதலும் அவற்றைப் பயன்படுத்துதலும் தொலைவை அடையும் விளைவுகளைக் கொண்டிருக்கும். அது கிறிஸ்தவர் என்ற வகையில் உங்களை மகிழ்விக்கும். (என்னிடத்தில், "கடைசியாக நான் சபையில் எனது இடத்தைக் கண்டறிந்திருக்கிறேன்!" என்று கூறியவர்களின் புன்சிரிப்பான முகங்களை என் மனதில் நான் காணமுடிகிறது.) அது உங்களைக் கர்த்தருக்கு உண்மையானவராகக் காத்துக்கொள்ளும். அது சபையைக் கட்டியெழுப்பும் (காண்க எபேசியர் 4:12). அது மற்றவர்களின் வாழ்வை ஆசீர்வதிக்கும், மற்றும் அது தேவனை மகிமைப்படுத்தும் (காண்க 1 பேதுரு 4:11).

## ... பின்பு அதைப் பயன்படுத்துங்கள் (12:3-8)

**அது ஏன் பயன்படுத்தப்பட வேண்டும்?**

இந்தப் பாடம் முழுவதிலும், நான் தேவன் நாம் *பயன்படுத்த வேண்டும்* என்பதற்காகவே நமக்கு வரங்களைக் கொடுத்திருக்கிறார் என்று உரைத்துள்ளேன். 6ம் வசனத்தில் நாம், "நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே" என்று வாசித்தோம் (வசனம் 6அ, ஆ). எனது NASB வேதாகமப் பிரதியில், "each of us is to exercise them accordingly" என்ற வார்த்தைகள் சாய்வெழுத்துக்களில் உள்ளது, இது இவ்வார்த்தைகள் மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டதைச் சுட்டிக்காண்பிக்கிறது. அந்த நீண்ட சொற்றொடரை அவர்கள் கூட்டியது ஏன்? ஏனென்றால் நமது வரங்களைப் *பயன்படுத்துவதற்கான* தேவையானது அந்த வசனப்பகுதி முழுவதிலும் ஊடுருவிப் பரந்துள்ளது. *தேவனே* நமக்கு வரங்களைக் கொடுத்திருக்கிறார் என்பதை மறவாதிருங்கள் (வசனங்கள் 3, 6). நீங்கள் யாருக்கேனும் ஒரு வெகுமதியைக் கொடுத்து அவர் (அல்லது அவள்) அந்த வெகுமதியை ஒருக்காலும் பயன்படுத்தாமல் இருப்பதைக் கண்டால் நீங்கள் எவ்வித உணர்வடைவீர்கள்?

மீண்டுமாக, நாம் சரீரத்தின் "உறுப்புகளாக" இருக்கிறோம் என்பதை மறவாதிருங்கள் (வசனங்கள் 4, 5): "கண்கள்," "காதுகள்," "கைகள்," "பாதங்கள்" மற்றும் பிற. ஒரு கண் காண்பதைச் செய்யவில்லை என்றால், அது தனது இருப்புக்கான நோக்கத்தை இழந்திருக்கிறது; ஒரு காது கேட்பதைச் செய்ய வில்லை என்றால், அது தனது இருப்புக்கான நோக்கத்தை இழந்திருக்கிறது. மேலும், நமது வேதபாட வசனப்பகுதியின் கடைசி மூன்று வசனங்கள், பல்வேறு வரங்களை உடையவர்கள் அவற்றைப் *பயன்படுத்த வேண்டும்* என்பதை வலியுறுத்துகின்றன.

**அது எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும்?**

நமது வரங்கள் வெறுமனே பயன்படுத்தப்படுவதற்காக இருப்பதில்லை; அவைகள் *ஒரு குறிப்பிட்ட வழியில்* செயல்படுத்தப்பட வேண்டும். இந்த வரங்களில் சிலவற்றைப் பயன்படுத்துதல் பற்றிய குறிப்புக்களைப் பவுல் கூடுதலாகக் கூறினார் (இந்த பட்டியலில், 1, 5, 6 மற்றும் 7ம் எண்ணுள்ளவை

*கீழே தரப்படுகின்றன).*

*(1) தீர்க்கதரிசனம் உரைக்கும் வரம்.* பவுல், "தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக் கடவன்" என்று கூறினார் (வசனம் 6இ). "ஏற்றதாக" என்பது *analogia* (*logos* ["வார்த்தை"] என்பதற்கு முன்னர் *ana* ["மேலே," "மீது," அல்லது "மேலாக"] என்ற சொல் சேர்க்கப்பட்டது) என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது, இதிலிருந்தே நாம் "analogy" என்ற வார்த்தையைப் பெறுகிறோம். *Analogia* என்றால் "ஒப்புமை, விகிதம், அளவு" என்று அர்த்தப்படுகிறது.[17] "அவரது விசுவாசம்" (நேரடியான அர்த்தத்தில் "அந்த விசுவாசம்") என்பது 3ம் வசனத்திற்கு ஒரு குறிப்பாக உள்ளது: ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் தேவன் பகிர்ந்த "விசுவாசத்தின் அளவு." இது "தேவன் கொடுத்துள்ளவற்றிற்கு அப்பால் செல்லுதலுக்கு எதிரான எச்சரிக்கையாக உள்ளது" என்று W. E. வைன் என்பவர் எழுதினார்.[18] தீர்க்கதரிசி ஒருவர், தமக்குத் தேவன் கொடுத்துள்ள செய்தியை மாத்திரமே பேசவேண்டியவராக இருந்தார். பேதுரு, "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்" என்று கூறினார் (1 பேதுரு 4:11அ).[19]

*(5) கொடுக்கும் வரம்.* பவுல், "பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்" என்று கூறினார் (வசனம் 8ஆ). "வஞ்சனையில்லாமல்" என்பதற்கான (*haplotes* என்ற) வார்த்தையானது "தனித்து" என்று அர்த்தப்படுகிற *haplous* என்ற வார்த்தையிலிருந்து வந்ததாகும். *Haplotes* என்பது பெருந்தன்மையை விளைவிக்கக்கூடிய "இருதயத்தின் தனிநிலையை" சுட்டிக்காண்பிக்கிறது.[20] KJV வேதாகமம் இவ்வார்த்தையின் அடிப்படை அர்த்தத்தை முக்கியத்துவப்படுத்துகிறது. "He that giveth, let him do it with simplicity." அதை நான் விரும்புகிறேன். நீங்கள் கொடுக்கும்போது, அதைக்குறித்து விளம்பரப்படுத்தாதீர்கள் (மத்தேயு 6:2 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்). NASB வேதாகமம் முடிவு விளைவின்மீது வலியுறுத்தம் இடுகிறது: "with liberality." CJB வேதாகமம் இவ்விரு கருத்துக்களையும் உள்ளடக்குகிறது: "Do it simply and generously."

*(6) முதலாளியாயிருக்கும்/வழிநடத்தும் வரம்.* பவுல், "முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்" என்று எழுதினார் (வசனம் 8இ). "ஜாக்கிரதை" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது, "ஊக்கம், வைராக்கியம்" என்று அர்த்தப்படுகிற *spoude* என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[21] காலங்கள் ஆகும்போது, நடத்துனர் ஒருவர் இளைப்படைந்து தமது கடமைகளை நிறைவேற்றுவதில் ஜாக்கிரதையற்றவராகக் கூடும். நாம், ஒரு சபைக்குழுமத்தை வழிநடத்துகிற மூப்பர்களைப் பற்றிப் பேசினாலும் சரி அல்லது தங்கள் குடும்பத்தாரை வழிநடத்துகிற தந்தையர்களைப் பற்றிப் பேசினாலும் சரி, அவர்கள் "தங்கள் பொறுப்பை கருத்தூன்றி மேற்கொள்ளுவது" அவசியமாக உள்ளது (NLT).

*(7) இரக்கஞ்செய்யும் வரம்.* கடைசியாகப் பவுல், "இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்" என்று கூறினார் (வசனம் 8ஈ). "உற்சாகம்" என்பது "hilarity" மற்றும் "hilarious" என்ற வார்த்தைகளை நாம் பெறுகிற *hilarotes* என்ற வார்த்தைகளிலிருந்து வருகிறது. *Hilarotes* என்பது "எந்த விஷயத்தையும் செய்ய [விரையும்படி] தூண்டுகிற மனதின் அந்த ஆயத்தநிலை,

அந்த மகிழ்ச்சியானநிலை'' ஆகியவற்றைக் குறிக்கிறது.[22] மற்றவர்களுக்குக் குரோத உணர்வுடன் உதவுதல் அல்லது முகத்தில் ஒரு சுளிப்புடன் உதவுதல் என்பது நன்மையைவிட அதிகமாகத் தீமையைச் செய்யக்கூடும். பீட்டர்ஸன் என்பவரின் பொழிப்புரை பவுலின் அறிவுறுத்துதலைப் பின்வருமாறு விரித்துரைக்கிறது: ''குறைவுபட்டவர்களுக்கு நீங்கள் சேவை செய்தால், அவர்களால் எரிச்சல் அடையவோ அல்லது அவர்களால் ஊக்கம் குறையவோ உங்களை அனுமதிக்காதீர்கள். உங்கள் முகத்தில் ஒரு புன்சிரிப்பை எப்போதும் காத்துக்கொள்ளுங்கள்'' (MSG). D. ஸ்டுவார்ட் பிரிஸ்கோ என்பவர், "இரக்கஞ் செய்தல் என்ற வரத்தினால் குறிப்பாக அருள்பெற்றவர்கள், தங்களின் அழகிய வரம் அறியப்படவரும்போது, தங்களின் நேரம் மற்றும் சக்தியை அதிகமாகக் கோரப்படுவதால் மகிழ்ச்சி இழந்து போய்விடக்கூடாது" என்று எழுதினார்.[23]

ஒவ்வொரு வரத்தையும் பயன்படுத்துவதற்கான செயல்முறையை விவரிப்பதில் பவுல் தமது நேரத்தைச் செலவிடவில்லை. மாறாக, அவர் நமது திறன்களைச் செயல்படுத்துவதில் நாம் கொண்டிருக்க வேண்டிய *எண்ணப் போக்கின்* வகைமீது கவனம்குவித்தார். இந்த வரங்களில் நான்கைப்பற்றிய பவுலின் அறிவுறுத்துதல்கள், எந்த வரத்தையும் பயன்படுத்துவதற்கான நல்ல ஆலோசனையைக் கொண்டுள்ளது:

- உங்களுக்கு அருளப்பட்டுள்ள வரம் எதுவாக இருந்தாலும், தேவனுடைய வசனத்துடன் தரித்திருந்து, அது கட்டளையிடும் வரையறைகளை ஏற்றுக்கொள்ளவும்.
- உங்கள் வரத்தை மனிதரால் காணப்படுவதற்கும் புகழப்படுவதற்கும் பயன்படுத்த வேண்டாம்.
- உங்கள் வரத்தைப் பயன்படுத்துவதில் வைராக்கியமாயிருங்கள்.
- உங்கள் வரம் குறித்து மகிழ்வாயிருங்கள் மற்றும் அதைச் சந்தோஷமாய்ப் பயன்படுத்துங்கள்.

தேவன் நமக்குத் தருகிற வெவ்வேறு வரங்கள்மீது நான் ஒரு கடைசிக் குறிப்பை ஏற்படுத்துவது அவசியமாக உள்ளது. மக்கள் மாறுபட்ட வரங்களைக் கொண்டுள்ளனர் என்ற உண்மையானது. சிலவேளைகளில், ஒரு சபைக்குழுமம் எந்த நடவடிக்கைகளைத் திட்டமிட வேண்டும் என்பது பற்றி கருத்து வேறுபாடுகளை உண்டாக்குகிறது. போதிக்கும் வரம் கொண்டவர்கள், கல்வித்திட்டமே எல்லாவற்றிலும் முக்கியமானது என்று நினைக்கலாம், இரக்கஞ்செய்யும் வரம் கொண்டவர்கள், மற்றவர்களுக்கு உதவுதலே சபையின் பிரதான வலியுறுத்தமாக இருக்க வேண்டும் என்று நம்பி இணங்கலாம். எல்லாரும் ஒரேமாதிரியான வரத்தைக் கொண்டிருப்பதில்லை மற்றும் எல்லா வரங்களுமே முக்கியமானவையாகும் என்பதை நாம் நினைவில் கொள்வோமாக. எனவே நாம் ஒவ்வொருவரும் செய்ய முடிவதைச் செய்துகொண்டு இணக்கத்துடனும் அன்புடனும் கூடி வாழக் கற்றுக்கொள்வோமாக.

## முடிவுரை

"யாரேனும் ஒருவரை விசேஷித்தவராக்குவது எது?'' என்று கேட்டதன் மூலம் நான் இந்தப் பாடத்தைத் தொடங்கினேன். இந்த உலகத்தில், செல்வந்தரா

யிருத்தல், அதிகாரம் நிறைந்தவராயிருத்தல் அல்லது திறமையுள்ளவராயிருத்தல் என்பது ஒருவரை விசேஷித்தவராக்குகிறது. இருப்பினும், உங்கள் தகுதி யானது உங்கள் செல்வம், உங்கள் பதவி அல்லது உங்கள் திறமை ஆகிய வற்றைச் சார்ந்திராத இடம் ஒன்றுள்ளது. அது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையாக உள்ளது, அதில் ஒவ்வொரு உறுப்பினரும் தேவைப்படுகிறார் மற்றும் ஒவ்வொரு உறுப்பினரும் முக்கியமானவராக இருக்கிறார்.[24] நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் இன்னமும் உறுப்பினர் ஆகாதிருந்தால், தேவன் தமது சபையில் உங்களைச் சேர்க்கும்படி, இயேசுவில் விசுவாசம் கொண்டு அவர்மீது நம்பிக்கைவைத்துள்ளவர் என்ற வகையில் ஞானஸ்நானம் பெறும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன் (நடபடிகள் 2:38, 47; 1 கொரிந்தியர் 12:13). பின்பு தேவன் உங்களுக்குக் கொடுத்துள்ள வரத்தைக் கண்டுபிடித்து, உங்கள்மீது அன்புகூருகிற கர்த்தரை மகிமைப்படுத்த அதைப் பயன்படுத்துங்கள். அதுவே இங்கு பூமியில் சந்தோஷமாயிருப்பதற்கும் நித்தியம் முழுவதிலும் தேவனுடன் இருப்பதற்குமான வழியாக உள்ளது.

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

"சபையில் உங்கள் இடத்தைக் கண்டறிதல்" என்பது இந்தப் பாடத்திற் கான ஒரு மாற்றுத் தலைப்பாக இருக்கலாம். இந்தப் பாடத்திலுள்ள ஏறக்குறைய ஒவ்வொரு கருத்திற்கும், ஒரு தனிப்பாடத்தை எழுதும்படி நான் சோதிக்கப் பட்டேன். இவ்வசனப்பகுதியிலிருந்து அவ்வளவு ஏராளமான நடைமுறைப் பயன்பாடுகள் ஏற்படுத்தப்பட முடியும்! இவற்றில் சிலவற்றை நான் சுட்டிக் காண்பித்தேன். உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு மிகவும் அவசியமான வற்றைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, நீங்கள் பிரசங்கிக்கும் அல்லது போதிக்கும் இடத்தின் சூழ்நிலைக்குப் பொருத்தமான வகையில் எனது சிந்தனைகளை விரிவாக்கிக் கொள்ளுங்கள்.

"பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக" (எபேசியர் 4:12) என்பதைக் காட்டிலும் சிலபணிப்பொறுப்புகளே அதிக முக்கியத்துவமானவைகளாக உள்ளன. இந்தப் பாடத்தின் நடைமுறைப் பயன்பாடு என்ற வகையில் சபைக்குழுமத்தின் நடத்துனர்கள், ஒவ்வொரு உறுப்பினரும் தத்தமது வரங்களைக் கண்டறிந்து அதைப் பயன்படுத்த உதவு வதற்கு நேரம் செலவிட விரும்பலாம்.

---

குறிப்புகள்

[1]இந்தப்பட்டியலை நீங்கள் வாழும் சமூகத்திற்கு ஏற்ற வகையில் தழுவியமைத்துக் கொள்ளவும். [2]Joe Barnett, "You Are Someone Special" (tract) (N.p., n.d.), 6. [3]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 583. [4]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph Henry Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 408. [5]"Function" என்பதற்குப் பதிலாக KJV வேதாகமத்தில் "office" என்றுள்ளது, இன்றைய நாட்களில் இது பல ஆண்டுகளுக்கு முன்பு கொண்டிருந்ததிலிருந்து மாறுபட்ட

அர்த்தத்தைக் கொண்டுள்ளது. NKJV வேதாகமத்தில் "function" என்றுள்ளது. [6]ரோமர் 12ல் ஏற்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள் தொடர்பாக, 1 கொரிந்தியர் 12ல் பல வசனப்பகுதிகள் மேற்கோள் காண்பிக்கப்பட முடியும். [7]உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு முன்பாக நீங்கள் நிற்கையில், பாடத்தின் இந்தப்பகுதிக்கு நீங்களே "காட்சி உதவிப்பொருள்" ஆகிறீர்கள். நீங்கள் உங்கள் உடலின் பல்வேறு பாகங்களைச் சுட்டிக்காண்பிக்க முடியும். [8]பெரும்பான்மையான எழுத்தாளர்கள், இந்தப் பட்டியலில் அற்புத வரங்கள் மற்றும் அற்புதமற்ற வரங்கள் உள்ளடங்கியிருப்பதாக ஒப்புக்கொள்கின்றனர், ஆனால் எவை அற்புதவரங்கள் எவை அற்புதமற்ற வரங்கள் என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. [9]R.C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 136. [10]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 354.

[11]Vine, 619. [12]"வேண்டிக்கொள்ளுகிறேன்" (*parakaleo*) என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது "மறுரூபமாக்கப்பட்ட வாழ்வு (12:1, 2)" என்ற பாடத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. [13]*The Analytical Greek Lexicon,* 265. [14]Vine, 404. [15]உங்கள் சொந்த உதாரணங்களை இங்கு பயன்படுத்துங்கள். நீங்கள் இந்த வரங்களில் சிலவற்றைக் கொண்டுள்ள (அல்லது கொண்டிருந்த) உள்ளூர் கிறிஸ்தவர்களின் பெயர் களை உள்ளடக்க விரும்பலாம். [16]James O. Baird, "Going to Heaven from the Pew," sermon preached at Macquarie church of Christ, Sydney, Australia, July 1976. [17]*The Analytical Greek Lexicon*, 23. [18]Vine, 494. [19]ரோமர் 12:6இயைப் பற்றி, R. W. ஜான் ஸ்டாட் என்பவர், "நாம் இந்தச் சொற்றொடரை 'விசுவாசத்துடன் ஒத்துப்போகும்படி' என்று மொழிபெயர்க்க வேண்டும். அதாவது, 'தீர்க்கதரிசனம் சொல்லுபவர், தமது செய்தியானது எவ்வகையிலும் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு நேர்மாறாயிராததை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்' " என்று கருத்துத் தெரிவித்தார் (John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series [Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994], 327). [20]O. Bauernfeind, "*haplotes*," in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 65.

[21]Vine, 169. [22]Ibid., 98. [23]D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 222. [24]Barnett, 9-10.